ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1713/10 - 2011 ජූලි 05 වැනි අඟහරුවාදා - 2011.07.05

*1713/10 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மேல் மாகாண மாகாண சபை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை இடைநேர் விளைவான ஏற்பாட்டுச் சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் 268 வது பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

*252 ஆம் அத்தியாயமாகிய மாநகரசபை கட்டளைச்சட்டத்தின் 272 (6) வது உட்பிரிவினுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 267 வது பிரிவில் கொழும்பு மாநகரசபைக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள தத்துவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு இங்கு கீழே காட்டப்பட்டுள்ள துணைவிதி, கொழும்பு மாநகரசபையின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கும், பணிகள் மற்றும் கருமங்களை நிறைவேற்றுவதற்காக நியமனம் செய்யப்பட்ட ஒமர் சுரேக் காமில் அவர்களினால் 2009.12.28 ஆம் திகதிய தீர்மானம் இலக்கம் 736 ன் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளது. 1989 ஆம் ஆண்டின் 12 வது இலக்க மாகாணசபை (இடை நேர்விளைவான ஏற்பாடு) சட்டத்தின் 268 ஆம் பிரிவின் பிரகாரம் அத்துணைவிதி மேல்மாகாணசபையின் முதலமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல், சட்டம் மற்றும், ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிருவாகம், மின்சாரம் மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாடு தொடர்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய என்னால் அனுமதிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கின்றேன்.*

பிரசன்ன ரணதுங்க,
முதலமைச்சரும் நிதி மற்றும், திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு,
காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம்,
மின்சக்தி மற்றும் எரிசக்தி, மனிதவலு, மற்றும் தொழில்வாய்ப்பு,
மற்றும் பொருளாதார மேம்பாடு தொடர்பான அமைச்சரும்,
மேல் மாகாண மாகாண சபை.

மேல் மாகாண மாகாண சபை முதலமைச்சர்,
"சிராவஸ்தி மந்திரய",
கொழும்பு 7,
2011, யூன் 06.

#### விளம்பரம், அலங்கரித்தல், சுவரொட்டி

01. இந்த உப விதியானது .................. ஆண்டின் கொழும்பு மாநகர சபையின் விளம்பரம் அலங்கரித்தல் சுவரொட்டி உப விதியின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

#### விளம்பர அறிவித்தல்

02. இந்த உப விதியானது நடைமுறைப்படுத்தப்படவுள்ள முதல் நாள் முதல் அல்லது மறுதினம் ஏதேனும் ஒரு விளம்பரம் காட்சிக்கு வைக்க நேரிட்டால் அந்த விளம்பர அறிவித்தல் இந்த விளம்பர அறிவித்தலின் உப விதிகளில் கூறப்பட்ட தேவைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

03. எந்தவொரு வீதிக்கும் தெருவுக்கும் ஆற்றுக்கு கடலுக்கு அல்லது ஆகாயத்தினை நோக்கியவாறு எந்தவொரு, விளம்பர அறிவித்தலும் மாநகர சபை ஆணையாளரினால் அதற்கு பதிலாக தயாரிக்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட அனுமதிப்பத்திரம் தவிர கொழும்பு மாநகர சபை பிரதேசத்தினுள் காட்சிக்கு வைத்தல் அல்லது காட்சிக்கு வைக்க திட்டமிடல் ஆனது எந்தவொரு நபரினாலும் மேற்கொள்ளப்படல் ஆகாது.

இருப்பினும் கீழே காணப்படும் விளம்பர அறிவித்தல் மின்சார ஒளியூட்டப்படாது எனில் இந்த துணை விதிச் சட்டத்தில் கூறப்பட்ட விதி முறைகள் இந்த விளம்பரத்திற்கு ஏற்புடையதாகும்.

அவ்வாறான விளம்பர அறிவித்தல் ஆவன-

(அ) அங்கீகரிக்கப்பட்ட புனிதத் தலம் அங்கவீனமுற்ற நபர் அல்லது பாடசாலை மாணவர்களிற்காக நிதி பெற்றுக் கொள்வதற்கான எந்தவொரு பொழுது போக்கு வைபவம் தொடர்பான விளம்பர அறிவித்தல்.

(ஆ) ஏதேனும் ஒரு பொழுது போக்கு வைபவம் தொடர்பான விளம்பர அறிவித்தல் எனின் விசேடமாக அந்த விளம்பர அறிவித்தல் அதற்கு ஏற்புடைய இடத்தில் பொருத்தப்பட்டு காட்சிக்கு வைத்தல்.

(இ) எவ்வித வியாபார விளம்பர அறிவித்தல் இல்லாத சமயம் அரசியல் அல்லது அரச நடவடிக்கைக்கான விளம்பர அறிவித்தல்.

(ஈ) தொடர்புடைய விளம்பர அறிவித்தல் ஆகக் கூடிய 4' x 3' அடி அளவுக்கு உட்பட்டதாகவும் சொத்துகள் அல்லது வாகனங்கள் கொள்வனவு செய்தல், குத்தகைக்கு வழங்குதல் அல்லது வாடகைக்கு வழங்குதல் ஆகிய நடவடிக்கைக்காக "வாடகைக்கு வழங்குதல்" அல்லது "விற்பனைக்கு" என்னும் விளம்பர அறிவித்தல்.

(உ) வீட்டுக்கு அருகில் உள்ள பெயர்த் தகடுப்பலகை.

(ஊ) உரிமையாளரின் பெயர், முகவரி குறிப்பிட்ட வாகனத்தில் பொருத்தப்பட்ட விளம்பர அறிவித்தல்.

(எ) ஏதேனும் ஒரு இடத்தில் நடைபெறும் வர்த்தக அல்லது வியாபாரத்தின் பெயர், முகவரி வகை காட்சிக்கு வைப்பதற்காக அவ்விடத்தில் வைக்கப்படும் விளம்பர அறிவித்தல்.

04. தொடர்புடைய விளம்பர அறிவித்தல் காட்சிக்கு வைப்பதற்காக ஆரம்பிக்க உத்தேசித்துள்ள தினத்திற்கு இருபத்தொரு (21) தினங்களுக்கு முன்னர் தொடர்புடைய விண்ணப்பம் தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானம் விண்ணப்பதாரிக்கு தெரியப்படுத்தல் வேண்டும்.

எனினும் அரசுக்கு தொடர்புடைய விடயங்கள், மக்களுக்கான செய்தி ஒரு மாதத்திற்கு அல்லது அதற்கு குறைந்த காலத்திற்கு மட்டும் காட்சிக்கு வைக்கப்படும் விளம்பர அறிவித்தலுக்காக இந்தப் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லையை கணிப்பீடு செய்யும் வகையில் சமர்ப்பிக்க முடியாத எந்தவொரு விண்ணப்பப் பத்திரத்தினை விசேட சந்தர்ப்பத்தில் நகர ஆணையாளரினால் ஏற்றுக்கொள்ள முடியும். கொடி, பதாதை அல்லது விளம்பர காட்சிக்கு வைக்கப்படவுள்ள பலகை வேலி என்பன குறுகிய கால விளம்பர பிரிவுக்குள் அடங்கும்.

05. மேலேயுள்ள துணை விதிச் சட்டம் 4 யின் கீழ் சமர்ப்பிக்கப்படும் சகல விண்ணப்பப்படிவமும் கீழே காணப்படும் இலக்கங்களுடன் ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(அ) சபையினால் தயாரிக்கப்பட்ட உரிய மாதிரி விண்ணப்பப்படிவம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) ஆணையாளரினால் நியமிக்கப்பட்ட திட்டம், அமைப்பு, விபரம் வேறு தகவல்.

(இ) குறித்த விளம்பர அறிவித்தல் காட்சிக்கு வைப்பதற்காக உத்தேசித்துள்ள உருவம் அமைந்துள்ள இடம் தொடர்பாக 1:1000 ற்கு குறையாத அளவுடைய வரையப்பட்ட நில அளவைத் திட்டப்படம்.

(ஈ) இந்த துணை விதிச் சட்டத்திற்கு ஏற்புடைய வகையில் அவ்வாறான திட்ட அமைப்பு அல்லது திருத்தம் உள்ளதெனில் அந்த திருத்தம்.

(உ) அருகில் உள்ள வீதிக்கு தெளிவாக உள்ள இடத்திற்கு அருகில் உள்ள காணியின் குறியீடு தொடர்பான விளம்பர அறிவித்தல் அமைந்துள்ள இடம் தெரியும் வகையில் வரையப்பட்ட திட்டம்.

(ஊ) விண்ணப்பதாரி காட்சிக்கு வைக்க உத்தேசித்துள்ள விளம்பர அறிவித்தல் அமைந்துள்ள இடத்தின் உரிமையாளர் இல்லை எனில் தொடர்புடைய இடத்தின் சட்டரீதியான உரிமையாளரின் கையொப்பத்துடன் சம்மதம் தெரிவிக்கப்பட்ட கடிதம் நகர ஆணையாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(எ) விளம்பர அறிவித்தல் காட்சிக்கு வைப்பதற்காக அனுமதி பெற்றுக்கொள்வதற்காக காலத்திற்கு காலம் நகர ஆணையாளரினால் நியமிக்கப்பட்ட அவ்வாறான வேறு தகவல்கள்.

06. விளம்பர அறிவித்தல் காட்சிக்கு வைப்பதற்காக நகர ஆணையாளரினால் அனுமதி பெறாமல் விளம்பர அறிவித்தல் அல்லது விளம்பர அறிவித்தல் காட்சிக்கு வைப்பதற்கு ஆன எந்தவொரு அல்லது விளம்பர வேலி அமைத்தல் அல்லது அமைக்கத் திட்டமிடல் ஆகிய செயற்பாட்டினை எந்தவொரு நபர் ஏனும் கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் செயற்படுத்த இயலாது.

07. மேலேயுள்ள துணை விதிச் சட்டம் 4 இன் கீழ் முன்வைக்கப்படும் விண்ணப்பப்படிவம் நகர ஆணையாளரினால் அனுமதிக்கப்பட்ட கட்டணம் செலுத்தும் வரை விண்ணப்பதாரிக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது.

08. விளம்பர அறிவித்தல் காட்சிக்கு வைப்பதற்காக எந்தவொரு நபருக்கும் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்போது அந்த அனுமதிப்பத்திரத்தின் தொடர்பிலக்கம் நகர ஆணையாளருக்கு அத்தியாவசியம் எனக் கருதப்படும் வேறு தகவல்கள் அந்த விளம்பர அறிவித்தலின் ஒவ்வொரு பக்கத்திலும் உள்ளடக்கப்படல் வேண்டும் என அந்த நபருக்கு மாநகர ஆணையாளர் அறிவுரை வழங்க வேண்டும்.

09. கொழும்பு மாநகர சபைக்கு உரித்தான அல்லது சபையினால் பராமரிக்கப்படும் வீதிகளுக்கு ஒதுக்கப்பட்ட காணிகளில் (Reservation) குறித்த உட்பட விளம்பர அறிவித்தல் அல்லது விளம்பர அறிவித்தல் காட்சிக்காக பலகையினால் ஆன வேலி 20' x 10' (உயரம்) அளவிலான கொடி சதுர வடிவில் காட்சிக்கு வைப்பதற்காக அல்லது வைக்கத் தீர்மானிப்பது ஆகிய முயற்சிகளில் எந்தவொரு நபரும் ஈடுபட இயலாது. இந்த விளம்பர அறிவித்தல் பலகை வேலிக்காக ஒழுங்கு செய்யும் இடம் 2.5 மீ அளவில் இருப்பதுடன் இடத்தின் அளவு வீதியின் பாதசாரி மேடையில் இருந்து 1.5 மீற்றரிற்கு அப்பால் இருத்தல் வேண்டும்.

10. வர்த்தமானியில் உள்ளவாறு (உறுதிவாக) வீதிச் சமிக்ஞை அதன் கம்பம் வீதிச் சமிக்ஞை மேற்பார்த்தல் (உச்சியில்), கம்பத்தில்) எந்தவொரு நபரும் விளம்பர அறிவித்தல் காட்சிக்கு வைக்கவோ அல்லது காட்சிக்கு வைக்க திட்டமிடவோ ஆகாது.

11. நில மட்டத்திலிருந்து குறைந்தது 2.5 மீற்றர் வரை எந்தவொரு நபரும் விளம்பர அறிவித்தல் பலகை வேலி காட்சிக்கு வைத்தல் ஆகாது.

12. சரித்திர புகழ் வாய்ந்த கட்டடம், கலாச்சாரம் சார்ந்த கட்டடம், பச்சை பசுமை நிறைந்த பிரதேசம், புகழ் வாய்ந்த பூங்கா, சிறுவர் பூங்கா, நினைவுச் சின்னம், சிலை, சமயத் தலங்கள், மயானம், வெளிநாட்டு தூதரக அலுவலகம், கல்வி சார் நிலைய கட்டடம் ஆகிய இடங்களை மறைக்கும் விதத்தில் எந்தபொரு நபரும் விளம்பர அறிவித்தல் அது தொடர்பான அமைப்புகள் அல்லது விளம்பர பலகை வேலி வைத்தல் அல்லது காட்சிக்கு வைக்க முயற்சித்தல் ஆகாது.

13. பார்ப்பவர்களுக்கு அருவருப்பு ஊட்டும் வகையில் அல்லது குறித்த பிரிவில் சேவை செய்வோருக்கு இடையூறாக உள்ள வகையில் விளம்பர அறிவித்தல் காட்சிக்கு வைத்தல் அல்லது காட்சிக்கு வைக்க திட்டமிடல் என்பன எந்தவொரு நபரினாலும் மேற்கொள்ளுதல் ஆகாது.

14. நியோன் இரசாயன ஒளிவிளக்கு விளம்பர அறிவித்தல் அல்லது அணைந்து எரியும், ஓடும் வகையில் அல்லது திடீரென எரியும் பின்னர் அணைந்து எரியும் விளக்கு அடங்கிய விளம்பர அறிவித்தல் அல்லது சாரதியின் பார்வைக்கு இடையூறாக இருக்கும் வகையில் எந்தவொரு விளம்பர அறிவித்தல் அல்லது விளம்பரம் செய்ய முற்படுவதை எந்தபொரு நபரினாலும் மேற்கொள்ளுதல் ஆகாது.

15. சொத்து உரிமையாளர்களின் உடமைகளின் முன்னால், இயற்கை வெளிச்சம், வெளிச்சம் வருவதால் உரிமையாளர்களின் உடமைகளுக்கு எந்தவொரு விளம்பர அறிவித்தல் அல்லது விளம்பர பலகை பொருத்துதல் அல்லது காட்சிக்கு வைத்தல் விளம்பர படுத்த முயற்சித்தல் ஏற்புடையதல்ல.

16. மேலேயிருந்து பார்க்கும்போது தெரியும் வகையில் அமைந்துள்ள எந்தவொரு விளம்பர அறிவித்தல் அல்லது விளம்பர அறிவித்தல் அமைக்கப்பட்ட பலகை நிலத்தில் காட்சிக்கு வைத்தல், காட்சிக்கு வைக்க திட்டமிடல் ஆகாது.

*17. சபையினால் அல்லது அரசினால் அல்லது அதிகாரம் பெற்ற அமைப்பினால் தடைசெய்யப்பட்ட இடத்தில் தொடர்புடைய எந்தவொரு விளம்பர அறிவித்தல் அல்லது விளம்பர அறிவித்தலுடனான பலகை அல்லது காட்சிக்கு வைக்க முயற்சித்தல் ஆகாது.*

*18. சுதந்திர மாவத்தை அல்லது காலி வீதியன் மத்திய வீதியில் பிரிக்கப்பட்ட பகுதியில் அல்லது அதனை நோக்கிய விதத்தில் அமைக்கப்படும் எந்தவொரு விளம்பர அறிவித்தல் அல்லது விளம்பர அறிவித்தலுடனான பலகை அல்லது விளம்பரப்படுத்தல் அல்லது விளம்பர படுத்த முயற்சித்தல் ஆகாது.*

*19. குறித்த அமைப்புடனான விளம்பர அறிவித்தல் அல்லது விளம்பர அறிவித்தல் காட்சிக்கு உரிய பலகை, சுற்றுவட்டம், வாகனம், திசை நோக்கிய பகுதி, மின்கம்பம், மின்தொலைக் கம்பம், சிறுவர் பூங்கா உட்பட பொது மக்கள் பூங்கா மற்றும் பொது மக்களின் சேவை வழங்கப்படும் வேறு இடங்கள் மற்றும் சபையினால் பராமரிக்கப்படும் வீதிகளில் அவற்றுக்காக ஒதுக்கப்பட்ட பிரதேசங்களில் அனுசரணை வேலைத் திட்டங்களின் கீழ் அவ்வாறான விளம்பர அறிவித்தல் காட்சிக்கு வைப்பவர் பராமரிப்பவர் அல்ல எனில் அவ்வாறான விளம்பர அறிவித்தல் விபரம் மாநகர ஆணையாளரினால் அனுமதிக்கப்படாவிடில் எந்தவொரு நபரினாலும் காட்சிக்கு வைத்தல் அல்லது காட்சிக்கு வைக்க முயற்சித்தல் ஆகாது.*

*20. வீதி அல்லது போக்குவரத்து சமிக்ஞைகளுக்கு சமமான எந்தவொரு விளம்பர அறிவித்தலும் எந்தவொரு நபரினாலும் விளம்பரப்படுத்தவோ அல்லது விளம்பரபடுத்த முயற்சித்தலோ ஆகாது.*

*21. மாநகர அனையளாளரினால் அங்கீகரிக்கப்படாது கட்டடத்தின் கூரையில் எந்தவொரு விளம்பர அறிவித்தல் காட்சிக்கு வைத்தல் அல்லது காட்சிக்கு வைக்க முயற்சித்தல் எந்தவொரு நபரினாலும் மேற்கொள்ளுதல் ஆகாது.*

*22. இந்த துணை விதிச் சட்டத்திற்கு மாறாக எந்தவொரு செயலும் கேள்விப் பத்திரத்தில் குறிப்பிட்டவாறு அனுசரணை வேலைத் திட்டத்திற்கு உட்சேர்த்தலோ அல்லது ஒரு மாதம் அல்லது அதற்கு குறைவான காலப் பகுதிக்கான விளம்பர அறிவித்தல் வேலைத் திட்டத்தில் உட்சேர்க்கப்பட்ட விளம்பர அறிவித்தல் திட்டத்திற்காக மட்டும் ஏற்புடையதான ஏற்புடைய தெரிவு செய்யும் அதிகாரம் நகர ஆணையாளருக்கு உரித்தாகும், கொடி, பதாதை அல்லது பெரிய விளம்பரம் காட்சிக்கு வைக்கும் விளம்பர அறிவித்தல் குறுகிய கால விளம்பர அறிவித்தலுக்கு உட்பட்டதாகும்.*

*23. கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் வீதிக்காக ஒதுக்கப்பட்ட பிரதேசங்கள்* (Reservation).

(i) *எந்தவொரு விளம்பரத்துடன் பொருத்தப்பட்ட தாங்கி அல்லது சட்டம் காட்சிப்படுத்துவதற்காக எந்தபொரு விளம்பர அறிவித்தலும் கொண்டு வருதல் அல்லது எந்தபொரு நபருக்குகேனும் கொண்டு வரத் திட்டமிடல் அல்லது.*

(ii) *எந்தவொரு விளம்பர அறிவித்தல் காட்சிக்கு வைத்தல் அல்லது அது தொடர்பான அறிவித்தலுக்கு கொண்டு வரப்படும் கிரமபோன், இசையமைப்பு கருவிகள் அல்லது வேறு உபகரணங்கள் எடுத்துச் செல்லுதல்.*

*நகர ஆணையாளரினால் அவ்வாறான விளம்பர அறிவித்தலுக்கான அனுமதி பெறாவிட்டால் எந்தவொரு நபரும் மேலே கூறப்பட்ட செயற்பாட்டில் ஈடுபட இயலாது.*

*24.* (i) *ஏதேனும் ஒரு விளம்பரம் பார்பதற்கு அருவருப்பாகவும் பயங்கரமாகவும் மனித பண்பாடுகளுக்கு எதிரானதாகவும் புலப்படும் உருவ அமைப்புகள் இருப்பின் அவ்வாறான விளம்பர அறிவித்தலை காட்சிக்கு வைத்த நபருக்கு மாநகர ஆணையாளரினால் எழுத்து மூலம் குறித்த அறிவித்தலின் கால எல்லைக்கு உட்பட்ட காலப் பகுதியில் அவ்வாறான விளம்பர அறிவித்தலை நிறுத்துமாறு அறிவிக்க இயலும்.*

(ii) *இந்த துணை விதிச் சட்டத்தின் கீழ் உள்ள அறிவித்தலின் பிரகாரம் எந்தவொரு நபருக்கும் வழங்கப்பட்டு இருப்பின் அந்த அறிவித்தலில் உள்ளவாறு உள்ள கால எல்லைப் பகுதியில் அந்த நபர் அந்த அறிவித்தலுக்கு ஏற்புடையதாக நடவடிக்கை எடுப்பதுடன் அந்த நபர் தொடர்புடைய விளம்பர அறிவித்தலை காட்சிக்கு வைத்தலை நிறுத்தாமல் இருப்பின் அந்த விளம்பர அறிவித்தல் நகர சபைக்கு உரித்தான அல்லது உரித்தில்லாத இடத்தில் இருந்தால் அதனை உடனடியாக அகற்றும் உரிமை அல்லது அதிகாரம் மாநகர ஆணையாளருக்கு உள்ளதுடன் அதற்கான செலவினை உரித்தாளரிடம் அறவிடுவதுடன் தொடர்புடைய நபர் செலுத்த கடப்பாடு உடையவர் ஆவர்.*

*25. விளம்பர அறிவித்தல் காட்சிக்காக வைக்கப்படும் பலகை சட்டம் உரித்தாளர் அல்லது அதனை குத்தகைக்கு பெற்றும் கொண்டவரினால்.*

(அ) இந்த பலகை சட்டம் பொருத்தும் பொழுது அதனை கடந்து செல்லும் பொது மக்களுக்கு எவ்வித இடையூறும் இல்லாத வகையில் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் ஒழுங்கான முறையில் பராமரிக்கப்பட வேண்டும். அதனைச் சூழவுள்ள மக்களுக்கு சொத்துகளுக்கு உரிய பாதுகாப்பு தொடர்பாக மேலே கூறப்பட்ட உரிமையாளர் அல்லது குத்தகைக்கு பெற்றுக் கொண்டவர் பொறுப்பாளி ஆவர் ; மேலும்

(ஆ) அந்த பலகைச்சட்ட அமைப்பின் முற்புறத்தில் தெளிவான முறையில் புலப்படும் வகையில் வாசிக்கக் கூடிய எழுத்தில் அவரின் பெயர், முகவரி, மாநகர சபையின் தொடர்பிலக்கம் என்பன குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

26. செல்லுபடியாகும் அனுமதிப் பத்திரம் இன்றி அல்லது குறித்த அனுமதிப் பத்திரத்தில் ஏதேனும் விதிக்காக அல்லது நிபந்தனைகளுக்கு எதிராக எந்வொரு பிரதேசத்திலும் விளம்பர அறிவித்தல் பொருத்தும் நடவடிக்கை மேற்கொண்டால் செயற்பாடு நடைபெற்றும் கொண்டிருக்கும் போது மீண்டும் ஆரம்பிக்கப்படும் போது அல்லது நிறைவடையும் போது இந்த துணை விதிச் சட்டத்தின் கீழ் உள்ள எந்தவொரு விதி முறைக்கு அப்பால் இந்த செயற்பாடு மேற்கொள்ளப் பட்டிருந்தால் அல்லது தற்போது நடைமுறையிலுள்ள அல்லது நடைமுறைபடுத்தப்படவுள்ள திட்டத்திலுள்ள நபரின் எழுத்து மூல அறிவித்தல் ஊடாக அந்த அறிவித்தல் ஆணையாளரினால் தெரிவிக்கப்பட்டவாறு அந்த அறிவித்தலில் உள்ளவாறு 07 நாட்களுக்கு குறையாத கால எல்லைக்குள் அல்லது அதற்கு முன்னர்

(அ) உடனடியாக அந்த விளம்பர அறிவித்தல் நடவடிக்கை நிறுத்தப்படல் வேண்டும் ;

(ஆ) அந்த விளம்பர அறிவித்தல் செயற்பாட்டை அதற்றவும் மாற்றவும் அல்லது அழிக்கவும் நகர ஆணையாளரினால் கோரிக்கை விடுக்க இயலும்.

(2) இந்த துணை விதிச் சட்டத்தின் பந்தி (1) இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அறிவித்தலின் பிரகாரம் குறித்த, குறித்த சட்டத்தேவையின் பிரகாரம் செயற்பட குறித்த நபருக்கு இயலும்.

(3) (அ) இந்த துணை விதிச் சட்டத்தின் பந்தி (1) இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அறிவித்தலின் பிரகாரம் குறித்த அறிவித்தலில் காணப்படும் கால எல்லைக்குள் அவ்வாறான எந்தவொரு அறிவித்தல் நடவடிக்கை நிறுத்தாமல் உள்ள சந்தர்ப்பத்தில் குறித்த நபருக்கு அறிவித்தல் வழங்கப்பட்டு அந்த விளம்பர அறிவித்தல் அகற்றுவதற்காக மாநகர ஆணையாளர் நடவடிக்கை எடுக்க இயலும். அந்த நபர் குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படத் தவறினால் அந்த விளம்பர சபைக்கு உரித்தான இடத்தில் அல்லது சபைக்கு உரித்தில்லாத இடத்தில் அமைந்திருந்தால் அந்த விளம்பர அறிவித்தலை அகற்றும் அதிகாரம் மாநகர ஆணையாளருக்கு உள்ளதுடன் அதனை அகற்றும் செலவினம் அந்த நபரிடம் அறவிடப்படுவதுடன் மாநகர ஆணையாளரினால் தீர்மானிக்கப்படும் கட்டணத்தை செலுத்த அவர் அல்லது அவர்கள் கட்டுப்பட்டுள்ளனர்.

(ஆ) இந்த விளம்பர அறிவித்தலை உடைக்க அல்லது அகற்றுவதற்கான கால எல்லை தேவைப்படின் அந்த நபர் கோரிக்கை ஒன்றை முன் வைத்தால் தமது செலவு தவிர்ந்த ஏனைய சேவைக் கட்டணங்கள் மட்டும் அறவிடப்படும் அடிப்படையின் கீழ் ஒரு மாதத்திற்கு உட்பட்ட கால எல்லைக்குள் தாமதமின்றி மாநகர ஆணையாளரினால் தமக்கு ஏற்புடையதெனகருதும் கால எல்லை வரை செயற்படுவதை பிற்போட முடியும்.

**அலங்கரித்தல்**

27. அரசியல், மத சார்புடைய, புனித கல்வி சார்ந்த அல்லது கலாச்சார விடயத்திற்காக மாநகர ஆணையாளரிடம் முன்பு கடித மூலம் பெற்ற அங்கீகாரத்திற்கு அப்பால் எந்தவொரு நபரும் நகர சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள வீதி, பிரபல்யம் வாய்ந்த இடம், மைதானம் அல்லது விளையாட்டு மைதானம் அலங்கரித்தல் அல்லது அலங்கரிக்க திட்டமிடல் என்பன மேற்கொள்ளலாகாது.

28. அவ்வாறான அனுமதிக்கான விண்ணப்பப் படிவமானது குறைந்தது 07 நாட்களுக்கு முன்னர் மாநகர ஆணையாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். எனினும் குறித்த கால எல்லைப் பகுதியில் சமர்ப்பிக்காத விண்ணப்பப்படிவங்களை விசேட காரணங்களுக்கான சந்தர்ப்பத்தில் மாநகர ஆணையாளரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

29. ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திலும் கீழே காணப்படும் தகவல்கள் உள்ளடக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

(அ) விண்ணப்பதாரியின் பெயர்.

(ஆ) அலங்கரிக்க உத்தேசித்த வீதி, பாதை, விளையாட்டு மைதானம், பிரசித்தி பெற்ற இடம் என்பனவற்றின் பெயர்.

(இ) அலங்கரிப்பு வகை, அலங்கரிப்பு வைக்கப்பட்டிருக்கும் காலம் மாநகர ஆணையாளருக்கு அத்தியாவசியம் எனக் கருதப்படும் வேறு தகவல்கள்.

30. விண்ணப்பப்படிவம் பெற்றுக் கொண்ட பின்னர் அலங்கரிப்பதற்காக பெற்றுக் கொண்ட பொருட்கள் அகற்றுவதற்காக அனுமதி கொள்வதற்கு முன்னர் வைப்புச் செய்த வைப்புப் பணம் எவ்வளவு என்பதனை நகர ஆணையாளர் தீர்மானிக்க முடியும். மாநகர ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட்டவாறு விண்ணப்பதாரி வைப்புப் பணம் வைப்புச் செய்ய வேண்டும்.

31. மேலே கூறப்பட்ட அலங்கரித்தல் தொடர்பாக பயன்படுத்திய பொருட்கள் அலங்கரிக்கும் வகை என்பனவற்றைக் கருத்திற் கொண்டு சரியான கால எல்லைக்குள் அந்த விண்ணப்பதாரி அகற்றாவிட்டால் அந்த அலங்கரிப்பை அகற்றுவதற்கு மாநகர ஆணையாளரக்கு தேவையான நடவடிக்கை எடுக்க இயலும். அவர் வைப்புச் செய்த வைப்புப் பணம் அவர்களால் ரத்துச் செய்ய இயலும். அந்த வைப்புப் பணத்தை மீண்டும் பெற்றுக் கொள்ள உரித்து இல்லை.

**சுவரொட்டி**

32. எந்தவொரு சுவரொட்டியும் ஒட்டுவதற்கு அல்லது காட்சிக்கு வைப்பதற்கு நகர சபையினால் ஒதுக்கப்பட்ட இடம் தவிர்ந்த ஏனைய மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் ஒட்டுதல் அல்லது காட்சிக்கு வைத்தல் இயலாது.

33. மேலே விபரம் குறிப்பிட்ட சுவரொட்டியில் குறித்த அச்சகரின் அல்லது வெளியீட்டாளரின் பெயர் முகவரி குறிப்பிடல் வேண்டும்.

**பல்வேறு**

34. மேலே கூறப்பட்ட துணை விதிச் சட்டத்திற்கு எதிராக அல்லது சபையினால் பராமரிக்கப்படும் சொத்துகளில் விளம்பர அறிவித்தல் காட்சிக்கு வைத்தலுக்கான இடத்தை ஒதுக்குவதற்கு தேவை யெனில் கேள்வி கோரும் உரிமை, பலம் மாநகர ஆணையாளருக்கு உண்டு. வீதி, பாதை, விளையாட்டு மைதானம், பிரசித்தி பெற்ற இடம் என்பனவற்றின் பெயர்.

35. நகர மதிப்பீட்டாளரின் இறுதியானதும், தீர்மானதுமான அறிக்கையின் படி எந்தவொரு விளம்பர அறிவித்தல் அல்லது அறிவித்தலுக்கான விண்ணப்பதாரியிடமிருந்து அறவிடப்படும் விண்ணப்பதாரி செலுத்த வேண்டிய கட்டணம் நகர ஆணையாளரினால் தீர்மானிக்கப்படும்.

36. அந்த துணைவிதிச் சட்டத்தின் எந்தவொரு நிபந்தனைகளையும் மீறும் எந்தவொரு நபரும் குற்றவாளியாக கருதப்படுவதுடன் குறித்த குற்றவாளியாக கருதப்பட்ட பின்னர் முதலாவது குற்றத்திற்காக ரூபா ஆயிரம் (ரூ. 1,000) ற்கு மேற்படாத தண்டப் பணமாகவும் இரண்டாவது தடவை அல்லது அதற்கு மேல் குற்றம் இழைத்தால் ரூபா இரண்டாயிரம் (ரூ. 2,000) ற்கு மேற்படாத தண்டப் பணமும், குற்றவாளி எனத் தீர்மானிக்கப்பட்ட பின்னர் அதனை மீறினால் அது தொடர்பாக கவனம் செலுத்துவதுடன் நகர ஆணையாளரினால் எழுத்து மூல அறிவித்தல் கையளிக்கப்பட்ட பின்னர் இதனை மீறும் எந்தவொரு நபருக்கும் ஒவ்வொரு நாளுக்கும் ரூபா இருநூற்று ஐம்பது (ரூ. 250) ற்கு மேற்படாத தண்டமாக இருத்தல் வேண்டும். தனியார் காணியில் அல்லது சபைக்கு அல்லது அரசுக்கு உரித்தான இடத்தில் அமைக்கப்பட்டுள்ள அல்லது பொருத்தப்பட்டுள்ள எந்தவொரு அங்கீகாரமற்ற விளம்பர அறிவித்தல் அல்லது விளம்பர அறிவித்தல் சட்டம் காட்சிக்கு வைத்தல், அலங்காரம் அல்லது சுவரொட்டி என்பன அகற்றுவதை தவிர்த்தல், குறித்த அகற்ற வேண்டிய அதனை அகற்றுவதற்கான செலவினை குறித்த நபரிடமிருந்து அறவிடுவதற்கு மாநகர ஆணையாளர் அறவிடுதல் தொடர்பாக எந்தவொரு நிபந்தனைகளையும் உள்ளடக்கப்பட மாட்டாது.

37. சொற்கள் தொடர்பாக மாறுபட்ட கருத்துகள் இருந்தாலன்றி இந்த துணைவிதிச் சட்டத்தில் "விளம்பர அறிவித்தல்" இன் கீழ் எந்தவொரு காணி, கட்டடம் அல்லது அந்த விடயம் தொடர்பாக அமைக்கப்பட்ட உருவம் அமைத்தல் அல்லது முற்றாக பொருத்தப்பட்ட அல்லது பகுதி ரீதியான விளம்பர அறிவித்தலுக்காக சொற்கள், குறியீடுகள், சுவரொட்டி (Placard) பலகை அறிவித்தல் என்பன ஏதேனும் ஒரு விடயத்திற்காக பயன்படுத்தபடும் உபகரணம் (Device) மாதிரி அல்லது சிலை அடங்கும்.

"கொடி" எனில் துணி அல்லது பொலிதீன் ஆகியவற்றில் தயாரிக்கப்பட்டு செங்குத்தாக காட்சிக்கு வைத்தல்.

"முக்கோண கொடி" எனில் துணி அல்லது பொலிதீன் ஆகியவற்றில் தயாரிக்கப்பட்டு செங்குத்தாக காட்சிக்கு வைத்தல்.

"பதாதை" நான்கு பக்கமும் சட்டம் அடங்கிய எந்தவொரு விளம்பரம் காட்சிக்கு வைத்தல்.

"ஆணையாளர்" எனில் மாநகர ஆணையாளர் எனக் கருதப்படும்.

"சபை" எனில் கொழும்பு மாநகர சபை எனக் கருதப்படும்.

"உரிமையாளரின் முகவரித் தகடு" எனக் கருதப்படுவது தொழில்சார் அல்லது வியாபாரம் எனக் காட்டப்படாத தனி நபரின் பெயர் எனக் கருதப்படும்.

விளம்பர அறிவித்தல் காட்சிக்கு வைக்கப்படும் பலகைச் சட்டம் அடங்கிய விளம்பர அறிவித்தல் காட்சிக்கு வைப்பதற்காக பொருத்தப்படும் பயன்படுத்தப்படும் எந்தவொரு அமைப்பும், தாங்கி, கம்பம், பதாகை, சுவர் அல்லது வேறு உபகரணங்கள் எனக் கருதப்படும்.

"கட்டடத்தில் பொருத்தப்பட்டிருக்கும் விளம்பர அறிவித்தல்" ஆகிய விளம்பர அறிவித்தல் செயற்பாட்டிற்காக பொருத்தப்பட்டிருக்கும் எந்தவொரு சொற்கள், இலக்கம், மாதிரி குறியீடுகள், பதாதை, சிலை மற்றும் ஏதேனும் காணியின் கட்டடத்தில் அல்லது மின் கம்பத்தில், சட்டம், அல்லது சேறு தாங்கி என்பவற்றில் பொருத்தப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட முழுமையான அல்லது பகுதியான விளம்பர அறிவித்தல் செயற்பாட்டிற்காக எந்தவொரு வீதி, பாதை, ஓடை, ஆறு ஆகிய இடங்களில் தெரியும் வகையில் மேல் தளம், பலூான், பரசூட், டிரேலர் அல்லது அதற்குச் சமமான வேறு உபகரணங்களும் அடங்கும்.

"அலங்கரித்தல்" என்பது துணிகளினால், பொலிதீன், மரங்கள், மரம் அல்லது இலைகள், கொடிகள், கொடிகளினால் தயாரிக்கப்பட்ட அலங்காரம் எனக் கருதப்படும்.

"சுவரொட்டி" என்பது கைகளால் பரிமாறப்படும், எழுதப்படும் அல்லது பூச்சு இடப்பட்ட அறிவித்தல் படம் அல்லது ஒட்டும் அறிவித்தல் ஆகும்.

1949 சனவரி மாதம் 21 ஆம் திகதிய 9939 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் கூறப்பட்டவாறு 1948 ஆம் ஆண்டின் விளம்பர அறிவித்தல் (கொழும்பு மாநகர சபை) துணைவிதிச் சட்டத்தின் பிரகாரம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

7 - 486

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.